ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1653/9 - 2010 මැයි 11 වැනි අඟහරුවාදා - 2010.05.11
*1653/9 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள்

*நியதிச்சட்ட முறையிலான தீர்ப்பு இல.: 4610.*
*விசேட இலக்கம் : ர/48.*

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழ் நியதிச்சட்ட முறையிலான தீர்ப்பு*

*பஹல கரந்தன வத்தை, கலடுவாவ என்ற இடத்தில் குடியிருக்கும் திரு. ஹென்திரிகே பராக்கிரம குணசேக்கர அவர்களால் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நியதிச் சட்ட முறையிலான கூற்றொன்றை அளித்துள்ளார். சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அந்த ஆணைக்குழுவால் நியதிச் சட்ட முறையிலான குத்தகை ஏற்றவருக்கு உரித்தாக இருந்த விவசாயக் காணிகளில் அவருக்கு சொந்தமாக வழுங்க வேண்டிய பகுதியை தீர்மானித்து நியதிச் சட்ட முறையிலான தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு நியதிச் சட்ட முறையிலான குத்தகை ஏற்றவருக்கு சொந்தமாக வழுங்க வேண்டிய விவசாய காணிப்பகுதி இங்கு கீழ் வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறாகும்.*

*சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா,*
*தவிசாளர்,*
*காணிச்சீர்திருத்த ஆணைக்குழு.*

*காணிச்சீர்திருத்த ஆணைக்குழு,*
*இல. சீ 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,*
*கொழும்பு 7,*
*2010, பெப்புருவரி 11.*

**அட்டவணை**

*சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், குருவிட்ட கோரளையில் பிரதேச வருமான அலுவலர் பிரிவில் மெதபத்துவ சிறிய பிரிவில் கரந்தன என்ற கிராமத்தில் அமைந்திருக்கும் நிலஅளவையாளர் நாயகத்தால் வரைபட இறுதி கிராம வரையபட்ட இ. கி. வ. இலக்கம் 219 இல் மேலதிகமாக இலக்கம் 22 இல் காட்டப்பட்டுள்ள கரந்தனவத்தை என்ற காணியின் லொட் இலக்கம் 890, 891 ஆகிய நிலத்துண்டுகளில் பிரிக்கப்படாத 34 ஏக்கர் 3றூ. 11 பேர்ச்சஸ் அளவிலான காணிப் பகுதியும்.*

*சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் எஹலியகொடை பிரதேச செயலகப் பிரிவில் மெதபத்துவ சிறிய பிரிவில் கரந்தன என்ற கிராமத்தில் அமைந்திருக்கும் நிலஅளவையாளர் நாயகத்தால் வரையப்பட்ட இறுதி கிராம வரைபட*

இலக்கம் 219 இல் மேலதிகமாக இலக்கம் 52 இல் காட்டப்பட்டுள்ள வெவலவத்தை என்ற காணியில் 5.0966 ஹெக்டெயார் அளவிலான லொட் இலக்கம் 2271, 2273, 2274 ஆகிய நிலத்துண்டுகளும் அதற்குள் அமைந்திருக்கும் மரஞ்செடிகள் பழவகைகள் மற்றும் கட்டிடங்கள் ஆகிய சகலதுமாகும்.

சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் எஹலியகொடை பிரதேச செயலகப் பிரிவில் மெதபத்துவ சிறிய பிரிவில் கரந்தன என்ற கிராமத்தில் அமைந்திருக்கும் நிலஅளவையாளர் நாயகத்தால் வரையப்பட்ட இறுதி கிராம வரைபட இலக்கம் 219 இல் மேலதிகமாக இலக்கம் 53 இல் காட்டப்பட்டுள்ள கரந்தனவத்தை என்ற காணியில் 0.7893 ஹெக்டெயார் அளவிலான லொட் இலக்கம் 2277 ஆகிய நிலத்துண்டும் அதற்குள் அமைந்திருக்கும் மரஞ்செடிகள் பழவகைகள் மற்றும் கட்டிடங்கள் ஆகிய சகலதுமாகும்.

5- 637

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.